ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

மே 7, 2019

அன்புள்ள ஆசிரியரிற்கு,

..................................

ஈஸ்டர் ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரமான குண்டுத் தாக்குதல்கள் பயங்கரவாதத்தின் கொடூரத்தை எமக்கு தொடர்ந்து நினைவூட்டிக்கொண்டிருக்கின்றன. அந்த தாக்குதல்களில் பலியானவர்களுக்காகவும் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்காகவும் நீங்கள் பிரார்த்திப்பீர்கள் என்று நம்புகின்றேன்.

இந்த அனர்த்தத்தை அடுத்து சம்பவங்களையும் அவற்றுக்கும் பின்னரான நிகழ்வுப்போக்குகள் மற்றும் விசாரணைகளை பற்றியும் செய்திகளை மக்களுக்குத் தருவதில் பிராதன ஊடகங்கள் வெளிக்காட்டிவரும் பொறுப்புணர்வு மெச்சத்தக்கதாக இருந்து வருகின்றது. தேசிய நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்கின்ற அதேவேளை, நடந்தவை பற்றிய உண்மைநிலையை வெளிப்படுத்துவதில் ஊடகங்களுக்கு முக்கிய பாத்திரம் இருக்கின்றது.

எமது செய்தி அறிக்கைகளில் இனம் மற்றும் மதம் பற்றிய குறிப்புகள் தவிர்க்க முடியாதவையாக இருக்கின்றன. ஆனால், இனங்கள், மதங்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்துவதே பயங்கரவாத வன்முறைகளில் ஈடுபடுபவர்களின் இறுதி இலக்காக இருக்கின்றது என்பதை மனதிற் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

முஸ்லிம் சமூகத்தினால் சில விசனங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, வழமையான குற்றச் செயல்களின் அங்கமாக அமையக் கூடிய போலி அடையாள அட்டைகள் / கடவுச்சீட்டுகள் / துப்பாக்கி ரவைகள் / வேட்டைத் துப்பாக்கி போன்றவைவையும் கூட மறைமுகமாக முஸ்லிம் தீவிரவாத சக்திகளினால் மேற்கொள்ளப்படுகின்ற சதித் திட்டங்களின் அங்கமாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

இந்த நெருக்கடி மிகுந்த நேரத்தில், சமூகப் பொறுப்புணர்வுடன் ஊடக சுதந்திரத்தைப் பேணுவதற்கு பத்திரிகை ஆசிரியர்களுக்கான ஒழுக்கக்கோவையை (இத்தால் இணைக்கப்பட்டிருக்கின்றது) பின்பற்றிச் செயற்படவேண்டிய தேவையை ஆசிரியர்கள் / பிரசுரகர்த்தாக்கள் தங்களது ஊழியர்களுக்கு விளக்கிக்கூற முடியுமாக இருந்தால் பெரும் பயனுறுதியுடையதாக இருக்கும். சமூகப் பொறுப்புணர்வே எமது கொழும்புப் பிரகடனத்தின் தொனிப்பொருளாகும். அவ்வாறு செய்வதன் மூலமாக செய்தித் தணிக்கை தலைகாட்டுவதற்கு வாய்ப்பளிக்காதிருக்க முடியும்.

மதிப்புடன்,

Kumar Nadesan

குமார் நடேசன்
தலைவர்
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்

96, Kirula Road, Colombo 05. Tel: (9411) 5353635 Fax: (9411) 5335500